www.tamilarangam.net



இன்று 22வது நாள்

“இன்னும் ஒரு நாளோ... இரண்டு நாளோ அல்லது மூன்று நாளோதானே எனது உயிர் இருக்கப் போகின்றது!!!”

-சுப்ரமணியம் பரமேஸ்வரன்.



# அனைவரும் கிளர்ந்தெழுங்கள்!!!

## சுப்ரமணியம் பரமேஸ்வரன் வழங்கிய செவ்வியின் எழுத்து வடிவம்.

## மக்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள் ஒன்றுதான்!

இப்பொழுது 22 நாட்களை கடந்திருக்கும் உண்ணாவிரதம், நேற்றில் இருந்து தண்ணீரும் அருந்தாமல், எமது கொள்கைகள், எமது வேண்டுகோள்கள் நிறைவேறும் என்ற உறுதியுடன் நான் எனது போராட்டத்தை இங்கு முன்னெடுத்து... மக்களுக்கு கேட்டுக் கொள்வது ஒன்றுதான். நீங்கள்... வேலைகளால் உங்கள் இதுகள் தடைப்படும். வேலைகள் இன்றி இருந்தால் நீங்கள் நாளை பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் எமது தமிழீழத்திற்கு... நீங்கள் அங்கே பிறந்து வளர்ந்தவர்கள். உங்களுக்கு உங்கள் நாட்டுக்கு செய்ய வேண்டிய கடமை உள்ளது. வருசத்துக்கு நூறு பவுண்சையும், இருநூறு பவுண்சையும், ஐநூறு பவுண்சையும் கொடுத்து விட்டு, நாட்டுக்கு செய்துவிட்டோம் என்று வீட்டுக்குள் இருந்துவிடாமல்... வரும் செய்திகளைப் பார்த்து கண்ணீர் வடிக்காமல்... நீங்கள் கண்ணீர் வடிப்பதாக இருந்தால் கூட, அதனை இங்கு வந்து சிந்தினீர்களாக இருந்தால் உங்கள் கண்ணீர் துளிகளுக்கு பெறுமதி இருக்கும். சிலபேர் என்னிடம்... நிறையப் பேர்கள் சொன்ன விசயம்... இந்த நிலைமையில் இங்கு வந்து பார்க்க விருப்பமில்லை என்று. உங்களிடம் சொல்லிக் கொள்வது இதுதான். இப்படி சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டிருக்காமல்... என்னை இங்கே வந்து பார்க்க விருப்பமில்லை என்றால், தொலைக்காட்சி பெட்டியை அணைத்து விட்டு, செய்திகளையும் பார்க்காமல் மூடி... அனைத்தையும் மூடிவிட்டு பேசாமல் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடவுங்கள். செய்திகளைப் பார்த்து வீட்டுக்குள், நாலு சுவற்றுக்குள் இருந்து கண்ணீர் வடிக்கத் தேவையில்லை. அந்த அனுதாபம் யாருக்கும் போய் சேரவும் சேராது. தொலைக்காட்சிகளுக்கு தொலைபேசி மூலம் அடித்து, அவரைக் காப்பாற்றுங்கள்! அவர் பிழைக்க வேண்டும் என்று அலறாதீர்கள். இங்கே நான் காயம்பட்டோ இல்லை கைகாலை இழந்தோ நான் இங்கே தவிக்கவில்லை. இங்கே இப்படி என்நிலைமையை காண உங்களால் முடியவில்லை என்றால், செய்திகளில் அங்கே நூறு இருநூறு சனங்கள் சாவதைப் பார்த்து எப்படி உங்களால் பொறுத்துக் கொண்டு வீட்டுக்குள் இருக்க முடிகின்றது. இதற்கு மேலும் நீங்கள் இறங்கி செய்யவில்லை என்றால் எப்பொழுது செய்யப் போகின்றீர்கள்? முடிவு ஒன்று வந்தாக வேண்டும் என்றால் அனைவரும் வீதியில் தயவு செய்து இறங்குங்கள். இனிமேல் உங்களிடம் யார் வந்து கெஞ்ச வேண்டும் என்று நினைக்கின்றீர்கள். உங்கள் காலில் விழுந்து வந்து, வீட்டில் இருந்து அழைத்து வர வேண்டுமோ? உங்களை வந்து போராடுங்கள் என்று யார் கேட்க வேண்டும் உங்களை? வாருங்கள். அனைவரும் வந்து உங்களுடைய போராட்டத்திற்கு... வேறு என்ன செய்யப் போகின்றீர்கள்? உங்களால் வேறு என்ன செய்ய முடியும் என்று நினைக்கின்றீர்கள்? ஏதாவது செய்யுங்கள். உங்களால் என்ன செய்ய முடியுமோ வந்து செய்யுங்கள். ஏதாவது செய்யுங்கள்!

என்னை வந்து பார்க்க விருப்பமில்லை என்றால், இந்த இடத்திற்கு வராதீர்கள். வேறு ஏதாவது இடத்திற்கு சென்று தன்னும் அங்கே போராட்டங்களை நடத்துங்கள். வேறு என்ன செய்ய முடியும் என்று நினைக்கின்றீர்கள்? போராட்டங்கள் ஆயிரம் நடத்திவிட்டோம். ஒரு உயிர் போவதனால்தான் எங்களுக்கு விடிவு வரும் என்றால் இந்த நாட்டில் போகட்டுமே! எத்தனை ஆயிரம் உயிர்கள் செத்துமடிகின்றன. அதுகள் உங்கள்... அதெல்லாம் உங்களின் கண்களுக்கு தெரியவில்லையா? ஏன் இப்படி வீணா வீட்டுக்குள்ளே குழம்புகின்றீர்கள் தேவையில்லாமல். வருவதால் நீங்கள் என்ன நாளைக்கு சாகப் போகின்றீர்களா? வீட்டுக்கை இருந்துவிட்டு இங்கே ஒருநாள் வருவதால் நீங்கள் சாகப் போகின்றீர்களா? சொல்ல ஏலாதா உங்கள் வேலையிடத்தில்? இப்படி எங்களோட இருந்த ஒரு பொடியன் சாகக்கிடக்கின்றான். நாங்கள்... எங்களுக்கு இரண்டு மூன்று நாள் லீவு தேவை. ஒரு கிழமை லீவு தேவை. தர இல்லை என்றால் எனக்கு இந்த வேலை தேவையில்லை என்று உங்களால் உதறமுடியாதா? நான் பெருமையாக சொல்லவில்லை என்ர உயிரை நான் உதறிப்போட்டு இங்கே இருக்கின்றேன் என்று. நான் உங்களிட்ட சொல்லவில்லை பெருமையாய். ஏனென்றால் எங்கட ஊர்ல ஆயிரமாயிரம் உயிர் சாகுது. அதே மாதரி என்ர உயிரும் ஒரு இதுஇல்லை. நான் பெருமைப்படவில்லை. நான் என்ர உயிரை உதறிப்போட்டு இருக்கிறேன் என்று. ஆனால் உங்கட வேலையை உதறிப்போட்டு வருவதால் நீங்கள் நாளைக்கு சாகப்போவது கிடையாது. இதையும் செய்ய முடியவில்லை என்றால் நீங்கள் தமிழராக பிறந்ததற்கு ஒரு அர்த்தமில்லை இது. என்னை... என்ரை கோபத்தை காட்ட முடியவில்லை. வருகின்றீர்கள். வேலையை முடித்து விட்டு பின்னேரம் வருகின்றீர்கள்... இரண்டு மணித்தியாலம் நிற்கின்றீர்கள். வரிசையில் நின்று பார்த்துவிட்டுப் போகின்றீர்கள். இங்கே கண்காட்சியா நடக்கின்றது? என்னை வைத்து கண்காட்சியா காட்டுகின்றார்களா? நீங்கள் வரிசையில் வந்து பார்த்து பார்த்திட்டுப் போவதற்கு. வேலைக்கு போறவர்கள் நேரடியாக வந்து சொல்லுகினம்... நான் இப்பத்தான் வேலைக்கு போய்விட்டு வருகின்றேன். ஒவ்வொரு நாளும் வேலையை விட்டுப் போகும் போது உங்களை வந்து பார்த்துவிட்டுப் போறன். என்ன இது? எனக்கே வெட்கமாக இருக்கின்றது. என்ன இன்னும் தமிழ் மக்கள் இவ்வளவுதானா? அனைவரும் தயவு செய்து... அனைவரும் இறங்குங்கள். இன்னும்... ஒரு நாளோ... இரண்டு நாளோ அல்லது மூன்று நாளோ தானே எனது உயிர் இருக்கப் போகின்றது. தயவு செய்து அதற்குள்ளாவது அனைவரும்... மூன்று நாட்களாவது... இங்குள்ள மூன்று இலட்சம் மக்களும் இணைந்து உங்கள் குரல்களை கொடுத்து... தயவு செய்து என்னால்... கண்டிப்பாக நான் சொல்கின்றேன். நான் இப்படியே இங்கே தனியே இருந்து... என்னால்... என்னை வைத்து இவர்கள் எதையும்... இந்த அரசாங்கம் ஒரு முடிவுக்கு கண்டிப்பாக வரமுடியாது. வரமாட்டார்கள். மக்கள் அனைவரும் இணைந்தாலொழிய... இல்லையென்று சொன்னால், நீங்கள் என்னையும் இழப்பீர்கள். தமிழ் மக்களையும் இழப்பீர்கள். இனிமேல் தமிழீழம் உங்கள் கனவில்... நீங்கள் நினைத்துப் பார்க்க முடியாது. இனிமேல் நீங்கள் இலங்கைக்கு திரும்பிச் செல்லும் பொழுது நீங்கள் எதிர்கொள்ளப் போகும் கெடுபிடிகள் என்பது உங்கள் கனவில் நீங்கள் நினைத்துப் பார்க்க முடியாது. ஆகவே மக்கள் அனைவரும் தயவு செய்து... உங்கள் காலில் விழுந்து கேட்டுக் கொள்கின்றேன். எனக்காக வேண்டாம். எனக்காக நீங்கள் வரவேண்டாம். அங்கே செத்துமடியும் அந்த மக்களுக்காகவாவது தயவு செய்து வாருங்கள். தயவு செய்து உங்களை கைகூப்பி அழைக்கின்றேன். அனைவரும் தயவு செய்து வந்து... மூன்று நாட்கள் தன்னும் உங்களை நான் கெஞ்சிக்கேட்கின்றேன். இந்தக் கிழமைகளில் மூன்று நாட்கள் மட்டும் அனைத்து மக்களும் இந்த இலண்டன் நகரை ஸ்தம்பிக்க வைத்தாலொழிய எங்கள் போராட்டம் வெற்றிபெறாது. உங்களை கெஞ்சிக் கேட்கின்றேன். நன்றி.

**அன்பார்ந்த பிரித்தானியா வாழ் தமிழீழ உறவுகளே, உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் வேளையில், இன்று (28.04.2009) இந்தக் கருத்தை எமது பாசத்துக்குரிய பரமேஸ்வரன் வெளியிட்டுள்ளார். இவரது அழைப்புக்கு செவிசாய்த்து அனைத்து உறவுகளையும் கிளர்ந்தெழுந்து வீதிகளில் இறங்கிப் போராடுமாறு அறைகூவல் விடுக்கின்றோம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்